මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் அமைச்சு
MINISTRY OF FINANCE AND PLANNING

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01 Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)- 11 - 2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/1/1/2010
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2009.12.11

வரவு செலவத் திட்ட சுற்றறிக்கை இல: 145

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

செலவினங்களைச் செய்வதற்காக அதிகாரமளித்தல் - கணக்கு வாக்குப்பணம் 2010.

2010 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு அங்கீகரிக்கப்படும் வரை தற்போது நிலவுகின்ற சேவைகள் தொடர்ச்சியாக நடாத்தப்படுவதற்கு பாராளுமன்றத்தினால் கணக்கு வாக்குப்பணம் பற்றிய பிரேரணை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த கணக்கு வாக்குப்பணத்தின் கீழ் செலவினங்களை செய்வதற்காக உரித்துடைய அனுமதிப்பத்திரங்களுக்கு கௌரவ நிதி திட்டமிடல் அமைச்சரினால் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கொடுப்பனவு வவுச்சர்களிலும் மற்றும் ஆவணங்களில் குறிப்பிடப்பட வேண்டிய அங்கீகாரம் கீழ் கண்டவாறாகும்.

i. கணக்கு வாக்குப்பணம் 2010 (பொது சேவைகளுக்காக) – 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அனுமதிப்பத்திரம் (இடைக்கால ஒதுக்கீட்டுக் கணக்கு)

ii. கணக்கு வாக்குப்பணம் 2010 (முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்காக) - 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க முற்பண அனுமதிப்பத்திரம் (இடைக்கால ஒதுக்கீட்டுக் கணக்கு)

iii. விசேட சட்ட சேவை நடவடிக்கைகளுக்காக - 2010 ஆம் ஆண்டின் விசேட சட்டச் சேவை அதிகார அனுமதிப்பத்திரம்.

02. கணக்கு வாக்குப்பணமொன்று செலவினங்களை செய்வதற்கு அனுமதி கிடைப்பதானது 2009 ஆண்டின் மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள, திரைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் செலவு விடயங்களுக்காக மட்டுமே ஆகும். ஆகையால் புதிதாக நிகழச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் சம்பந்தமான செலவினங்கள் செய்வதற்கு 2010 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு அங்கீகரிக்கப்படும் வரை இருத்தல் வேண்டும் என்பது இதன் கருத்தாகும்.

03. அந்தந்த செலவினத் தலைப்புகளில் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள முதலாம் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது. "2010 ஆம் ஆண்டுக்கான கணக்கு வாக்குப்பணம் – விரிவான வரவு செலவு மதிப்பீடுகள் தயாரித்தல்" எனும் தலைப்பில் எனது 2009.11.24 ஆம் திகதியுடைய கடிதத்தின் வழிகாட்டல்களின் பிரகாரம் தங்களால் தயாரிக்கப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட விபரங்களும் கவனத்திற் கொள்ளப்பட்ட பின்னர் ஒவ்வொரு செலவிடும் நிறுவனங்களிலும் 2010 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் செலவு விடய குறியீட்டு எண்களின் கீழ் செலவிடப்படக் கூடிய உச்ச செலவின எல்லை உற்சேர்க்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடு ஒன்று வேறாக அனுப்புவதற்கு தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறாயினும் அந்தந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்கனவே பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கணக்கு வாக்குப்பண எல்லைகளை விஞ்சாமல் இருப்பதற்கு நிறுவனத் தலைவர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

04. இத்துடன் உள்ள இரண்டாவது அட்டவணையில் முற்பணக் கணக்குகளின் உச்ச செலவின எல்லைகள் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த எல்லைகள் விஞ்சாமல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் சம்பந்தமான செலவினங்களைச் செய்வதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு இயலக்கூடியதாக இருக்கும்.

05. ஏற்கனவே பாராளுமன்ற அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ள விசேட சட்டச் சேவை நடவடிக்கைகள் சம்பந்தமாக 2010 ஆம் ஆண்டிற்கு தேவைப்படக்கூடிய மொத்த பணத்தொகைகள் சம்பந்தமாக கௌரவ நிதி, திட்டமிடல் அமைச்சரினால் அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பம் : பீ.பி. ஜயசுந்தர
திறைசேரிச் செயலாளர் மற்றும்
நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர்